அசல் வழக்கு எண். **467/2018,** பி. வா.சா.**4,** இஸ்ரேல் ஜான் **,** த/பெ**.** சுவிசேஷா முத்து தேதி **04.04.2024**

<u>குறுக்கு விசாரணை</u> **:**

1. நான் எந்த ஊரில் வசிக்கிறேன் என்றால் தூத்துக்குடி மாவட்டம் திருசெந்தூர் தாலுகா, வெள்ளாளன்விளையில் வசித்து வருகிறேன். என் அப்பா பெயர் சுவிசேஷா முத்து, அம்மா பெயர் அன்னபாக்கியம். எனது உடன் பிறந்தோர் எத்தனை பேர் என்றால் எனது தகப்பனாரின் முதல் தாரத்திற்கு பிறந்த ஒரே மகனான ஆசிர் நல்லதம்பி மற்றும் இரண்டாவது தாரமான எனது அம்மாவிற்கு நானும் ஞானபிரகாசம் , ராசம்மாள், மரியாள், கோவில்பிச்சை தங்கராஜ், மேரி, ஆகியோரும் வாரிசுகள் ஆவோம். எனது தகப்பனாரின் முதல் தாரமான ராசம்மா அவரது மகன் ஆசீர் நல்லதம்பி பிறந்த 22 வது நாளில் இறந்து விட்டார். அதன் பின்னர் எனது அம்மாவை எனது தகப்பனார் திருமணம் செய்து கொண்டார். எனக்கும் ஞானபிரகாசத்திற்கும் தவிர மற்றோர்களுக்கு திருமணம் ஆகிவிட்டது.

2. எனக்கும் எனது சகோதரர் ஞானபிரகாசத்திற்கும் என்ன காரணத்தினால் திருமணம் ஆகவில்லை என்றால் இந்த வழக்கு நடவடிக்கையின் காரணமாக எனது உயிருக்கு அச்சுறுத்தல் இருந்து வந்தது அதனால் நான் திருமணம் செய்து கொள்ளவில்லை. எனது சகோதரர் ஞானபிரகாசத்திற்கு உடல்நல குறைவு காரணமாக திருமணம் ஆகவில்லை. எனது சகோதரர் ஞானபிரகாசம் எந்த வருடம் இறந்தார் என்றால் 17.03.2006ல் இறந்தார். எனது சகோதரர் ஞானபிரகாசம் எங்கு வைத்து இறந்தார் என்றால் இதுபற்றி எனக்கு தெரியாது, ஆனால் வாதியின் வீட்டில் எனது அண்ணன் உடலை வைத்திருந்ததாக சொன்னார்கள். ஞானபிரகாசம் எந்த வருடம் எங்களது குடும்பத்தை விட்டு வெளியில் சென்றார் என்றால் 1981ஆம் ஆண்டு அறந்தாங்கி வட்டம், பொன்பேத்தியில் அவருக்கு விடுதி காப்பாளர் பணி கிடைத்ததால் சென்றார்.

3. 1981ஆம் ஆண்டிற்கு பின்னர் ஞானபிரகாசத்தை நான் பொன்பேத்திக்கு சென்று பார்த்தேனா என்றால் பார்த்ததில்லை, அவர் விடுமுறைக்கு ஊருக்கு வருவார். ஞானபிரகாசம் விடுதி காப்பாளராக பணியில் சேரும்போது என்னை தவிர எனது சகோதர சகோதரிகளுக்கு திருமணம் ஆகிவிட்டதா என்றால் ஆசிர் நல்லதம்பிக்கு மட்டும் திருமணம் ஆகி இருந்தது. மற்றவர்களுக்கு ஆகவில்லை. ஞானபிரகாசம்

இறப்பிற்கு முன்பு அவருக்கு திருமணம் ஆகி குழந்தைகள் இருந்தது என்ற விவரத்தை தெரிந்துகொண்டேனா என்றால் இல்லை. 18.10.1990 ஆம் தேதியில் எனது சகோதரர் ஞானபிரகாசம் என்பவர் அன்னம்மாள் என்பவரை பதிவு திருமணம் செய்துகொண்டார் என்ற விவரம் எனக்கு எப்போது தெரியவந்தது என்றால் நீதிமன்றத்திலிருந்து இந்த வழக்கின் அழைப்பாணை பெற்றப்பின்னர்தான் தெரிய வந்தது.

4. இந்த வழக்கின் அழைப்பாணை எனக்கு எந்த தேதியில் கிடைக்கப்பெற்றது என்றால் தேதி முழுமையாக நினைவில்லை. 2009 ஆம் ஆண்டு எனக்கு அழைப்பாணை கிடைத்தது. 1982 ஆம் வருடத்தில் ஞானபிரகாசத்திற்கு புதுக்கோட்டை தலைமை அரசு மருத்துவமனையில் விதைப்பை அறுவைசிகிச்சை செய்யப்பட்டு அகற்றப்பட்டது என்பதற்கு மருத்துவ ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை, மருத்துவ ஆவணங்கள் பெறுவதற்கு புதுக்கோட்டை தலைமை அரசு மருத்துவமனையில் மனு செய்ததற்கான ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேன். எந்த தேதியில் மருத்துவ ஆவணம் கேட்டு புதுக்கோட்டை தலைமை அரசு மருத்துவமனையில் மனு செய்தேன் என்றால் 21.03.2006 இல் கொடுத்தேன். அதன் பின்னிட்டு அது தொடர்பாக தொடர்ச்சியாக மனு செய்துள்ளேன். 2006 முதல் இன்றைய நாள் வரை ஞானபிரகாசத்திற்கு செய்யப்பட்டதாக கூறப்படும் அறுவை சிகிச்சை தொடர்பான ஆவணம் எனக்கு கிடைக்கவில்லை என்றால் சரிதான்.

5. உண்மையில் ஞானபிரகாசத்திற்கு புதுகோட்டை தலைமை அரசு மருத்துவமனையில் விதைப்பை அறுவைசிகிச்சை செய்யப்பட்டு அகற்றப்பட்டிருந்தால் அதுதொடர்பான மருத்துவ ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.1 முதல் பி.வா.சா.ஆ.14 வரையான ஆவணங்களில் மருத்துவமனையிலிருந்து ஞானபிரகாசம் அறுவைசிகிச்சை தொடர்பாக அனுப்பட்டதாக எந்த ஒரு மருத்துவ ஆவணமும் இல்லை என்றால் சரிதான். எனது சகோதரர் ஞானபிரகாசத்திற்கு குழந்தை பெறுவதற்கான உடல் தகுதி இல்லை என்றுதான் கட்சி செய்கிறேன் என்றால் குழந்தை பெறுவதற்கான உடல் தகுதி இல்லை, அதே சமயம் அவருக்கு திருமணமும் ஆகவில்லை.

6. ஞானபிரகாசம் எங்களது வீட்டை விட்டு வெளியேறி விடுதி காப்பாளர் பணிக்கு சென்ற பின்னர் அன்னம்மாள் என்பவரை 18.10.1990 ஆம் தேதியில் பதிவு திருமணம் செய்து கொண்டு குடும்பம் நடத்தியதில் மார்ட்டின், அமலா, ஜெசி என்ற மூன்று குழந்தைகள் பெற்றுக்கொண்டு சந்தோசமாக அன்னம்மாளுடம் குடும்பம் நடத்தி

வந்தார் என்ற விவரம் எனக்கு நன்கு தெரியும் என்றால் அன்னம்மாள் என்பவரை ஞானபிரகாசம் திருமணம் செய்து கொள்ளவில்லை. மார்ட்டின், அமலா, ஜெசி என்ற மூன்று குழந்தைகளும் ஞானபிரகாசத்திற்கு பிறந்த குழந்தைகள் அல்ல. மேற்படி விவரத்தை எப்போது நான் தெரிந்து கொண்டேன் என்றால் ஞானபிரகாசம் இறப்பிற்கு பின்னர் தெரிந்து கொண்டேன். 2004 ஆம் ஆண்டு நான் கீரமங்கலத்தில் உள்ள எனது அண்ணன் ஞானபிரகாசம் வீட்டிற்கு சென்றபோது அங்கு அன்னம்மாள் எனது அண்ணன் ஞானபிரகாசனுடன் இருந்தாரா என்றால் அங்கு வேலைக்காரியாக இருந்தார்.

7. 2004 ஆம் ஆண்டு நான் கீரமங்கலத்தில் உள்ள எனது அண்ணன் ஞானபிரகாசம் வீட்டிற்கு சென்றபோது அங்கு மார்ட்டின், அமலா ஆகியோர் எனது அண்ணன் வீட்டில் வசித்து வந்தார்கள் என்றால் சரிதான். 2004 ஆம் ஆண்டிற்கு பின்னர் ஞானபிரகாசம் வீட்டிற்கு எப்போது சென்றேன் என்றால் 12.02.2006 ஆம் தேதியில் சென்றேன். அந்த சமயத்தில் 3 வது குழந்தை ஜெசி என்பவர் ஞானபிரகாசம் வீட்டில் இருந்தாரா என்றால் இருந்தார். அப்போது எனது அண்ணன் ஞானபிரகாசத்திடம் அன்னம்மாளை அவர் திருமணம் செய்து கொண்டாரா என்ற விவரத்தை கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் கேட்டேன். அன்னம்மாளை வேலைக்காரி என்று சொன்னார். 3 வது குழந்தை ஜெசி எனது அண்ணன் ஞானபிரகாசத்திற்கு பிறந்தது என்பது பற்றி கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் அதுபற்றி அவரிடம் கேட்கவில்லை.

8. எனது அண்ணன் ஞானபிரகாசம் காப்பாளர் பணியில் சேரும்போது அவருக்கு திருமணம் ஆகவில்லை என்பதால் பணி பதிவேட்டில் எனது அம்மா பெயரை நியமனதாரராக காட்டியிருந்தார் என்றால் சரிதான்.

(வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.)